



ஓலை 74| ஓசை 197| ஜூன் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றின் அடங்கப் பெறின்**

## பொருள்

**அடக்கத்துடன் வாழ்வதே அறிவுடைமை என்று அறிந்து, ஒருவன் அடக்கமாக வாழ்ந்தால் அவனது அடக்கம் நல்லவர்களால் அறியப்பட்டு அது அவனுக்குப் பெருமையைக் கொடுக்கும்.**

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

# நெடிலெழுத்தாய் நிமிர்ந்து நிற்போம்!

பா வகை : வழிநடைச் சிந்து

மாத்திரை மதிப்பில் நெட்டெழுத்தே - என்றும்
மாண்பில் மிகுதியடி
மனத்தினில் கொள்வாயடி
சூத்திரம் சொல்லும் மாமாநீ - கொஞ்சம்
சொல்படி நடந்திடுநீ
சூரராய் திகழ்ந்திடுநீ

ஏட்டிக்குப் போட்டி பேசும் - பெண்ணே
எக்காளம் கூடாதடி
என்மொழி கேட்டிடடி
வாட்டி வதைக்கும் வலிகளைக் - கண்டால்
வளைவதும் பிழையேடி
வலிமையாய் நிமிர்ந்திடடி

வளைந்து போதல் பிழையா - மாமா
வாழ்க்கை அதுதானே
வழிசொல்லும் நாணலுமே
இளைத்தல் என்றும் அழகல்ல - அதை
இயல்பில் பொருத்திடுநீ
இருளை விலக்கிடுநீ

நெருப்பாய் சுடுமே நிமிர்ந்தே - நின்றால்
நெறிக்கும் இடர்களுமே
நிலையென்ன மாமாவே
நெருப்பே இங்கு இருளை - அகற்றும்
நெறியொடு நின்றிடுநீ
நிமிர்ந்திடு நெடிலெனநீ



கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்

மன்னித்துகொள் மகளே
உனைக்
கொஞ்சும் நேரம் விடுத்து
கொஞ்சம் சம்பாதிக்கிறேன்
எனை மறவாதே



கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# ஔவையாரின் மூதுரை

வாழ்க்கைப் பயணத்தில்
வாழ்க்கை சிறந்திட

வறுமையில் செம்மையாய்
வாழ்ந்திடல் நன்று.

துரோகம் செய்யாது
தூய்மையாய் இருந்திடு.

பாலின் வெண்மை
பாங்காய் நிலைக்கும்.

அட்டாலும் குன்றாது
அசிதம் அடையாது.

சுவையில் மாறாமல்
சாசுவதமாய் நிற்கும்.

நற்குணமுடையோர்
நலிந்தாலும் பிறழார்.

நெறி தவறார்
நொவ்வுதல்செய்யார்.

முந்நீர் விளையும்
முத்தும் சங்கும்.

சங்கினை நாளும்
சுட்டாலும் வெண்மையே

மேன்மையுடையோர்
என்றும் அத்தன்மையரே.



பண்போடு இருப்பவர்
பாடறிந்து ஒழுகுவர்.

நட்போடு பழகாதோர்
நோதலைச் செய்வர்.

கீழோராய் இருப்பவர்
கிஞ்சித்தும் உதவார்.

இனியன செய்வோர்க்கும்
இன்னாவே செய்வர்.

நட்பினை விரும்பாது
நலிதலை வேட்பர்.

மேன்மக்களாய் இருப்போர்
மேன்மை சிறப்பு.

சான்றோர் பிறர்க்குச்
சான்றாகத் திகழ்வரே.

கவிஞர் செ.கலைவாணி, மேட்டூரணை

# துளிப்பாக்கள்

நகரும் சருகுகள்
பேசிக் கொள்ளும்
நிலத்தோடு சலசலப்பு.

வெப்பத்தில் தகிக்கும்
சூரியனுக்கு கவரிவீசும்
மரங்கள்.

பொய் உண்மையாக முயற்சிக்கும்.
அந்த அவசியம் ஒருநாளும்
தேவைப்படுவதில்லை உண்மைக்கு.

இளமையெனும் கனியைக்
காலமெனும் கொடும்பசிக்காரன்
சப்பிப் போட்ட கொட்டையே முதுமை.

திக்குத் தெரியாத
காட்டில் இரவெல்லாம்
அடைமழை.

யார் யாரோ வரும் கனவில்;
நீ வருவாய் என்ற நம்பிக்கையில்;
நித்தம் கழிகிறது எனது நித்திரை.

மிதித்தவர்களில் ஒருவர் கூட
பாவமென்று நினைக்கவில்லை
சவஊர்வலத்தில் சிதறிய பூக்கள்.

என்னை புரிந்து கொண்ட
கவிதையை; நான் தெரிந்து
வைத்திருக்கிறேன்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

16. ஆதிரை பிச்சை இட்ட காதை .

காயசண்டிகை
வடக்கே வித்தியாதரர் நகரம் காஞ்சனபுரத்தில் பிறந்தாள்
துடுக்கானவள் பொதியமலை ஆற்றங்கரையில் வளர்ந்தாள்
அடுத்து ஒரு முனிவர் சாபம்,'' தீராப் பெரும் பசியோடு அலைக ''
படுத்தாலும் உறக்கமின்றி பசியோடு புகார் நகரில் திரிகிறாள்.

ஆதிரை வரலாறு;
ஆதிரையின் கணவன் சாதுவன் ஒழுக்கமில்லாதவன் காமுகன்
மீதி வாழ்க்கை பொதுமகள் ஒருத்தியிடம் மயங்கிக் கிடந்தான்
பாதியில் வந்தவள் தந்த உணவை உண்டு வட்டும் சூதும் ஆடினான்
வீதிக்கு வந்துவிட்டான் தன் செல்வம் எல்லாம் இழந்து பராரியாய்

காசில்லாதவனை வீட்டில் வைத்து என்ன பயன் விரட்டிவிட்டாள்
தாசியின் குணம் அறிந்து பொருள் ஈட்ட கடல் பயணம் சென்றான்
வீசிய புயல் காற்றில் மரக்கலம் முறிந்து கடலில் தத்தளித்தான்
ஆதிவாசி, ஆடையின்றி திரியும் நாகர்கள் வாழ்விடம் சேர்ந்தான்

உயிர் தப்பியவர் கூறினார் '' ஆதிரையே கடலில் கணவன் இறந்தான்,''
மயிர் நீக்கின் வாழா கவரிமான் ஆதிரை இனி யாருக்காக வாழ்வது?
துயருற்றவள் ''கணவனோடு சேர்வேன்,'' தீக்குழியில் இறங்கினாள்
உயிருடம்பினை தீ தொடாமல் திருமகள் போல் வெளியில் வந்தாள்.

அசரீரி ஒலித்தது :
"உன் கணவன் கடலில் உயிர் பிழைத்து நாகர்களிடம் சிக்கினான்
உன் துன்பம் தீர அவன் சந்திரதத்தன் கப்பலில் இங்கே வருவான்"
தன் கணவன் வரவை விழிமேல் வழிவைத்து காத்திருந்தாள் ஆதிரை
அன்று முதல் பத்தினிப் பெண்கள் தொழுகின்ற சிறப்பினைப் பெற்றாள்

தொடரும் ...

கவிஞர் ந. திருக்காமு

# ஈன்றவள் மிஞ்சிய ஈர்ந்தமிழ் மொழி



செந்தமிழே நவில்தோறும்
நாவினில் நர்த்தனமே

உதட்டில் இனித்திட
உள்ளமும் மகிழ்ந்திடவே

தமிழே அமுதே
தரணியை ஆள்கிறாயே

பாவலரும் பாங்காய்ப்
படித்திடும் நற்றமிழே

புலவரும் புன்னகைப்
பூத்துக் களிப்பாகின்றரே

உணர்வில் கலந்திட்ட
உயர்ந்த மொழியே

தரணியெங்கும் புகழ்
பரப்பி வருகின்றாய்

அரசரின் அவையில்
ஆட்சி புரிந்தாயே

மழலையும் மனம்
விரும்பும் தாய்மொழியே

உலகம் முழுவதிலும்
உந்தன் உச்சரிப்பே

கற்கண்டாய் கனியமுதாய்
கற்றவர் பயில்கின்றரே

நறுமண மலர்களாய்
பூத்துக் குலுங்குகிறதே

தமிழ் நறுமணம்
நானிலத்தில் பரவுகிறதே

எத்தனை மொழிகள்
இருப்பினும் ஈடாகுமா

உயர்ந்து நிற்கிறாய்
இமயம் போன்றே

ஈன்றவள் மிஞ்சிய
ஈர்ந்தமிழ் மொழியே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# கவிதை எனும் விதை



விதைகளிங்கே விருட்சங்களாகின்றன
கவிதையும் இங்கே கற்பனைச் சிறகில்
கவின் மிகு பிரஞ்சம் படைக்கின்றன.

இதய வயலெங்கும் உழுது
இன்பம் பயக்கும் கவிதை எழுது
மனதை மயக்கும் பொழுது
இயற்கை அன்பினை தொழுது
ஆனந்த கண்ணீர் விட்டு அழுது
அன்பின் விதையை உலகிற்கு
அழகின் கவிதையாய் வழங்கு

விதைகள் மண்ணில் விழுந்து மடியாதவரை
விழிப்பதில்லை - வீரிமாய் பயன்
கொடுப்பதில்லை.
கவிதைகள் இதயங்களில் விழுந்து
இன்பச்சுனையை சுரக்காதவரை
வாழ்வில் சுகந்தம் மயிலிறகின் தடவலாய்
தென்றலின் அருவி விரிந்தே வீழ்வதில்லை

விதைகளின் வீழ்ச்சியில் மனம்
மயக்கும் மலர்கள் பூக்கும் அழகின்
இளஞ்சோலை எழிலாகும்-இன்பம் கொட்டும்
இமைகளின் இன்ப சாளரங்கள் பொருந்திய
விழிகளின் வியப்பிற்கே.
கண்களின் வார்த்தைகளைப்
பொதியச் சொல்லும் காவியம்
படைக்கும் கவிதைக்கும்
எழுச்சியின் எழிலுக்கே ஈரேழுலுகும்
வியந்தே நிற்கும் விந்தையின் பார்வைக்கே.

விதையின் விளைச்சலில் மிகுந்த
களம் காட்டுகிற விளைவின் பத்தால்
களஞ்சியம் பெருகும்.
பஞ்சம் பசி பட்டினி இங்கிருந்தே
பட்டமாய் பறந்தோடும்.

கருப்பொ ருள்கள் கட்டும் கவிதைக்கும்
கற்பனை சிறகை வானில் விரித்திட
கட்டுகிற கவிக்கழனி செழிக்க, ஆங்கு
இளங்காலையும் மயங்கும் மாலையும்
விடியலும் விடாமுயற்சியின் ஏணியும்
கவிதையெனும் விதையூன்ற தழைத்து
செழிக்கும்- புவி தனை புரட்டிப் போடும்

உலகமெல்லாம் உய்வோருக்கு
உன்னத விதைகள் பத்து நூறு மடங்காய்
வயல் வெளி தனில் ஊன்றியெடுத்த பலனில்
விளைந்தே உச்சம் தொட்டிட.

உளம்புகுந்தே உருவான கவிதை வித்து
குடை விரித்தே கூடுதடா.
நடை போடுதடா உள்ளத்து உணர்ச்சியோடே
உவந்திங்கே வையகத்தை உயரம் தொட்டிடவே.

ஆம்!
கவிதையும் விதையும் பூமித்தாயின்
கண்களாய்.

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

மகனே !
நீ விழுந்து எழுந்து வளர்ந்து
வாழக் கற்றுக் கொள்
எதிர்காலம் இனி
ஏற்ற இறக்கம் நிறைந்தது
நீ பயணிக்கும் பாதை
நீளமானது.

உன் நீண்ட பாதை
முட்களும் கற்களும்
நிறைந்தவை.
முடிந்தவரை போராடு!
முடியாத பொழுதுகளில்
சற்று ஓய்வெடு!
சரிந்து விடாமல் எழுந்து விடு.

உன் பயணப்பாதை நெடுகிலும்
வளைவு நெளிவு நிறைந்தது
நீ கடந்து செல்லும் பாதையில்
கற்களும் முட்களும்
காலில் தைக்கலாம்
கழற்றி எறி கனப்பொழுதும்
நீ சோர்ந்து விடாதே.

உயரே பறக்கும்
கழுகைப் பார்!
தனித்து நின்று
வலிகளோடு போராடி
தன்னம்பிக்கையோடு
மீண்டும் புத்துயிர் பெற்று
உயரே பறக்கிறது
உறுதி உள்ளத்தில் வேண்டும்

தன் இலக்கை நோக்கிப்
பயணிப்பதில் அது
பின் நிற்பதில்லை
தனக்காக நிச்சயிக்கப்பட்ட
வாழ்வின் போராட்டங்களில்
அதன் வேதனைகளும்
பொறுமையும்
எண்ணிலடங்காதவை.



தேனீக்களைப்பார்
ஒரு துளித் தேனைச்சேமிக்க
ஆயிரம் பூக்களை
நாடிச்செல்கின்றன
தமக்கான இருப்பிடங்களை
அமைப்பதில்
பொறியலாளர்களையும்
வென்று விடுகின்றன.

சோம்பலாய் நீ
உணரும்போதெல்லாம்
சுறுசுறுப்பாய் ஓடித்திரியும்
எறும்புகளைப் பார்- தன்
எதிர்காலத்திற்கான
சிறுகச் சிறுகச்சேமிக்கும்
அதன் அழகைப்பார்.

காலம் நமக்காயக்
காத்திருப்பதில்லை
நாடுபவை எல்லாம்
கண்ணெதிரே வந்து
வீழ்வதும் இல்லை
நாம் நினைத்தபடி வாழ்க்கை
எளிதாய் அமைவதுமில்லை.

போராட்டங்களை
சவால்களாய் ஏற்றுக்கொள்
அவயே அழகிய வாழ்க்கை
அனுபவங்கள்.
உன் எதிர் கால சுபீட்சத்திற்கான
பயிற்சிப் பாசறை
மறந்து விடாதே
மனம் தளர்ந்து விடாதே.

நாமெல்லாம்
இவ்வுலகின் அழகை
இரசிக்க வந்த
சுற்றுலாப்பயணிகள்
திரும்பிச் செல்லும் தேதி மட்டும்
உனக்கும் எனக்கும்
நிச்சயமில்லை
வாழும் வரை போராடு.

*கவிஞர் செண்பகச்சோலையாள், ஆயிஷ், கம்பளை*

# அந்த சிலர்

எல்லா கோணத்திலும்
தெளிவாய் இருப்பதாய்
எண்ணிக் கொள்கிறார்கள்
எப்போதும் சிலர்.

எல்லாம் தெரிந்தது போல்
அலட்டல் கொள்ளும் சிலருக்கு
எதுவும் தெரிந்திருப்பதில்லை
என்ற பேருண்மை
காலதாமதமாய் தெரிய வருகிறது.

எல்லாம் தெரிந்தது போலான
பாவனையை காட்டிக்கொள்வதிலிருக்கும்
கம்பீரமும், அலைச்சலும்
அந்த சிலருக்கு
எதையும் கூடுதலாய்
தெரிந்துகொள்கிற
ஆர்வமோ முனைப்போ
இருப்பதே இல்லை.



அத்தனை அறிவும்
கொட்டிக்கிடக்கும் இடம்
சீந்த ஆளின்றி இருப்பதை
அறியாமல் இருக்கிறார்கள்
அந்த சிலர்

எல்லோரும் எல்லோரையும்
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை
அந்த சிலர் நினைவில்
வைத்துக்கொள்வது
எல்லோருக்கும் நல்லது.

கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

பிறையொளி ஈன்றெடுத்த மகவு
பிழைக்க வழி தெரியாமல் திரிய
பொழுது வணங்கி நல்கிய அருள்
மகவு செழுமையுடன் நிற்க
வானும் மண்ணும் துணை.

காலம் மிகவும் அழகானது
காத்திருப்பும் நிறைவானது.
காவல் திறவோன் வாசலில்.
கூளியர் திக்கற்று நிற்க.
அறம் மெல்ல சூழ்ந்தது.
அதிகாரச் செருக்கு வீழ்ந்தது.

காட்சிப்பிழை நிகழ்ந்தது
கனவு பாழ்பட்டு போனது.
சூழல் கை கூடவில்லை.
சுட்டு விரல் ஓவியம்
கோணலாகி போனது.
சுருக்குப்பை கரைந்தது.
சுள்ளி பொறுக்க நடந்தாள்
கருப்பாயி கிழவி.
பொழுது சாயும் முன்
உலை வைக்க.



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# என் கனவு

பாதை வேறு பயணம் வேறு
என் வாழ்வில் கவிஞன் ஆனேன்
பலரதுப் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டேன்
அமைதியாய் புத்தகமும் எழுதத் தொடங்கினேன்
கற்பனை வரியில் கவிதை எழுத எழுத
அருவியாய் கொட்டியது தூரிகை
எனது எழுத்துக்கள் வெளி உலகிற்கு
தெரிய வேண்டும் முயற்சி செய்கிறேன்
வெளி வருமா என்ற எண்ணம்
நாட்களும் நகர்ந்துச் செல்கிறது முகம்
அறியா உறவுகள் வைத்த பாசம்
என்னை அரவணைக்க
நானும் மகிழ்ந்தேன்
நித்திரையிலும் கனவோடு
பயணித்துக் கொள்கிறேன்
ஆக்கமும் ஊக்கமும் இரண்டு கண்கள்
தேடலில் தேடி தேடி நானும்
தேடுகிறேன் எனது கனவு நிறைவேறுமா



கவிஞர் ஜெ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# நெஞ்சு பொறுக்குதில்லையே

ஈடேறும் என நாம் எண்ணிய தருணங்கள்
கைவிட்டு காட்சியாக மட்டும்
கரை காண நெஞ்சம் பொறுக்குதில்லையே.

நொடி காணப்பொழுதிலும்
அந்த கனவை
நினைத்து ஒவ்வொரு
காரியமும் மெய்ப்பட

ஓடுமீன் ஓட உறுமீன் வரும்
தக்க நேரம் தலைப்பாய் கவிழ்த்து
தன் தாகத்தை நீர்த்து

பொய் மத்தாப்பு வேடிக்கை காட்டும்
மதிக்கட்ட மாந்தோரடெல்லாம் இருப்பது
ஒரு சாபம் நெஞ்சம் பொறுக்குதில்லையே.



கவிஞர் வியாத்தின் சீ. லக்ஷ்ஹரன்

தொலைத்து விடாமல்
பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்

மௌனம் என்ற சாவி
உலகத்தை திறக்கிறது.



கவிஞர் அ. செல்வராஜ், உடுமலைப்பேட்டை

# வாழ்க்கை இனிதே!

நான் படிக்கத்
தொடங்கினேன்.
எழுதுவதற்கு எழுத
தொடங்கினேன்.

படிப்பதால் எனக்கு
ஆசை வந்ததோ,
அதனால் மேற்படிப்பு
படிக்க ஆசை தூண்டியதோ.

இப்போ பொறுப்புகளோ
வந்தது.
வேலைக்கு வாய்ப்பு
வந்தது.

திருமண வாழ்க்கையே ஆனது
தலைக்கு மேல்
பாரம் வந்தது.

தலைக்கு மேல்
பொறுப்பு வந்தால்
அனைத்து சமாளித்து
வாழ்க்கை இனிதானதே!



கவிஞர் ஷர்மிளா செந்தில்குமார்

1
புத்தக வாசிப்பு மனதை
ஒருமுகப்படுத்தும்
தியானம் போன்றது.
நம் எண்ணங்களை
ஒற்றைப் புள்ளியில் குவித்து
மனநிறைவை அளிக்கிறது.

2
ஒரு புத்தகம் எண்ணற்ற
கற்பனைகளின் திறவுகோல்.
எழுத்துகளின் வழியே
புதுப்புது யோசனைகளை
நம்மால் உணர முடியும்.

3
வாசிப்பவரின் மனதில்
தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில்
அமையும்படியான நூல்களே
காலத்தைத் தாண்டி நிலைத்திருக்கும்.

4
நீங்கள் வாசிக்கும் புத்தகத்தில்
விரிவன எழுத்துகள் அல்ல.
உங்களின் எதிர்காலம்.

5
புத்தகத்தை வாசிக்கையில்
அறிவுப்பார்வை விசாலமடைகிறது.
எண்ணங்கள் கூர்மையடைகின்றன.
சஞ்சலங்கள் அமைதியடைகின்றன.
நம்மை நாமே உணரமுடிகிறது.

6
எப்படி வாழ்ந்தோம் என்ற வரலாற்றை
எப்படி வாழப்போகிறோம் என்ற பண்பாட்டில் இணைத்து
எதை உலகத்திற்கு விட்டுச் செல்கிறோம்
என்பதை லட்சியமாக்கி நம்மை உயிர்ப்பிக்கும்
அறிவுப் பெட்டகமே புத்தகம்.

7
வாழ்வில் முன்னேற்றத்திற்கான
தடைகளைக் கடக்க
எல்லா அனுபவங்களையும்
நாமே பெற முடியாத சூழலில்
புத்தகங்களின் அனுபவங்கள்
பேருதவி புரிகின்றன.

8
புத்தக வாசிப்பு என்பது
உலகை அறிந்து கொள்ள உதவும்
எளிய ஆனால் வலிமையான சாதனம்.

9
உங்களின் கனவுகளை வழிநடத்திட,
முன்னேற்றத்திற்கு பாதை அமைத்திட,
எண்ணங்களை வலுப்படுத்தி கூர்மையாக்கிட,
இடையூறுகளைக் களைந்து பயணித்திட
நீங்கள் வாசிக்கும் புத்தகமும்
பேருதவி புரியும்.

10
நீங்கள் புத்தகங்களுடன் தோழமையாகும்போது
உங்களுக்குள் புதிய புதிய
சிந்தனைகள் ஊற்றெடுக்கும்.

கவிஞர் இளையவன் சிவா, நரசிங்கபுரம்

# பெற்றோர்

அன்னையாய் பிதாவாய்
அரிய தெய்வமானீர்
ஆண்டவன் வடிவமாய்
ஆருயிர் பெற்றெடுத்தீர்
முன்னறி தெய்வமாகி
மகத்தான பணிசெய்தீர்
மேதினியில் நாமுயர
மனதிலே படியமைத்தீர்
*****

சூரியனாய் சந்திரனாய்
சுடர்மெழுகாய்க் கண்டோம்
சதாநாளும் கோவிலாக
சிந்தையிலே கொண்டோம்
கரிசனையை வரிசைசெய்து
கண்முன்னே வைத்தீர்கள்
கண்ணாகவே இனிதியங்கி
கடவுளாகவே வழியமைத்தீர்
*****

தாகமறிந்து பசியறிந்து
தீர்த்துவைக்கும் உள்ளங்கள்
தேகமுருக்கி தேகமுவந்து
தலைநிமிரவைத்த வள்ளல்கள்
யுகதெய்வமாகி யோக்கியமாக்கிய
யாதுமாகிய உபகாரிகள்
யாவதும் கடந்து
யாவருக்குமுதவிய உத்தமர்கள்
*****

அன்போடு அறிவை
அள்ளி வழங்கினீர்
ஆற்றல்கள் நல்கி
ஆளுமைகள் வளர்த்தீர்
இன்பமே சுரந்து
இடும்பை துரத்தினீர்
ஈகைத் திறன்களும்
இமயமாய் வளர்த்தீர்
*****



எள்தான் என்றாலும்
ஏழாக்கிப் பகுத்தூட்டுவீர்
இரவையும் பகலாக்கி
தியாகங்கள் செய்தீர்
உள்ளம் தூய்மையாக்கி
உயர்த்தியே வைத்தீர்
ஊனையே உருக்கி
ஒளிபெறச் செய்தீர்
*****

ஆருடம் பார்க்க
அடிக்கடி நடப்பீர்
அர்ச்சனை செய்ய
ஆலயம் நகர்வீர்
வேருடன் வேதனை
விலக்கி எறிவீர்
வாழ்ந்து காட்டி
வரலாறும் புகட்டினீர்
*****

பெற்றோர் பெருமையோ
பேசற்கு அரியதே
பேசவைத்த தெய்வங்களோ
பாசக் கடல்களே
ஆற்றலுள்ள தமிழ்போல்
அன்னை தந்தையே
எத்தனை பிறப்பெடுத்தாலும்
எம்பெற்றோரை மறப்போமோ!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், இலங்கை

# பௌர்ணமி நாளில்

பனிபிரதேசத்தின் பாசக்காரி
பலித்துக்காட்டுவோர்க்கு மோசக்கோபக்காரி

பசியென்று வருபவருக்கு தாய்க்காரி
படிக்கும் பிள்ளைகட்கு தோழமைக்காரி

பரிதாபத்திலே பாவக்காரி
பாவிகளுக்கு பரோபரக்காரி

பிரியமானவர்களுக்கு பிடித்த உறவுக்காரி
பீற்றிக்கொள்பவருக்கு பீனிக்ஸ் பறவை



புரியாதவர்களுக்கு புதிருக்கு பதில்
பூவையாய் நினைப்பவருக்கு பூவின் மணம்

பெரும்பாலுமே நல்லவளுக்கு நல்லவள்
பேச்சிரைந்தாலுமே பேதை குழந்தையிவள்

பைய பழகிய பிறகே பண்பறிவர் பலர்

பொறுப்பு ஏற்றுக்கொள்வதிலே பொக்கிஷம்,
போலி மனதுடையவருக்கும் பொறாமை கொள்ள செய்பவள்

பௌர்ணமி நாளில் பிறந்தே நீலா என பிரதிபலிக்கிறாளே!

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

என்மேல் படுத்தவர்
எத்தனையோ
என்னை மிதித்தவர்
எத்தனையோ

வெய்யிலில் வருபவர்க்கு தெய்வமாய் நான்
வெளிசென்று வருவற்கு அரியணையாய் நான்

மதிய உறக்கம் தந்து மருந்தை தவிர்த்தவன் நான்
மக்கள் மேடையாய் மடியேந்தி மகிழ்ந்தவன் நான்

மழை பெய்யும் வேளையில் கரையொ துங்கும் குடை நான்
விளையாடும் பிள்ளைகளுக்கு மைதான களம் நான்

பொழுது சாய்ந்த பின் பெண்களின் பட்டி மன்ற சபை நான்
கலகங்கள் கால் முளைக்க காரண தளம் நான்

மடிமீது அமர்ந்து மகிழ்ந்தவர் பல பேர்
மயானம் போகும் முன்
என் மேல் கிடந்தவர் பல பேர்

வயதான மனிதர்களை விட்டெ றியும் நாகரிகம் போல்,
என்னை அடக்கம் செய்த இக்கால அறிவுகளே

என்னை அழித்து விட்டு அமைதி இடம் தேடி
அறிவின்றி அலைகின் றீர் அங்கிங்கே!

சின்ன திண்ணை யொன்றை வீட்டு முன் கட்டிடுவீர்
இன்னும் நேரமுண்டு புத்தியதை பெற்றிடுவீர்

*கவிஞர் மு. சரவணன், மயிலாடுதுறை*

# கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

எழுதுபவர் எல்லாம் எழுத்தாளராக வேண்டும் ;
எனில் எழுத்தாளர் என்பவர் எவரோ? - இங்கு
வந்தவர் போனவர் எல்லாம் எழுதி விட்டால்
'இலக்கணம் என்பது யாது?'

பாமர னெல்லாம் படிக்க வேண்டும் தான்;
அரசியல் வலையில் அது நடந்தா தீரும் ?
இருப்பவ ரெல்லாம் படித்து விட்டால் - இங்கே
'அரசியல் செய்வது எவ்வாறு?'

நோயாளி யெல்லாம் இங்கு குணமாகலாம்
மருத்துவத் தொழிலில் இது நிறை வேறிடுமா?
அனைவ ருக்கும் இலவசம் என்றால் - இங்கு
'தனியார்கள் பிழைப்பது எப்படி?'

வாசிப்ப தெல்லாம் இசையல்லவே? இங்கு,
நான் உரைப்ப தல்லவே இசையி லக்கணம்?
இசைப்ப தெல்லாம் இசையா னால் - நான்
'கத்திப் பிழைப்பது எங்ஙனம் ?'

ஏரியும் குளமும் மீளத் தான் வேண்டும்
மீண்டு விட்டால் எங்கும் வெள்ளம் வாராதா?
நீர் நிலைகள் பெருகி விட்டால் - எங்கும்
'இருக்கும் அடுக்குமாடிகள் வானிற்கா?

இருக்கத் தான் வந்தோம் எல்லோரும் இங்கு,
இல்லாமல் போகிறோம் வருபருக்கு இடம் விட்டு
வந்தவ ரெல்லாம் இருந்தே விட்டால் - இங்கு
'இருப்பவர் செல்வது எங்கே?'



கவிஞர் சி.வே.முத்துச்செழியன்(எ)வேதப்பிரிசி

# யா அஸீஸ் யா ஹகீம்

இறைவா
மனதில் பாரம் சூடி
சிரம் வெடிக்கும் அளவில்
ஆகிறது

சக்திக்கு மீறி என் தகமைக்கு மீறி
பாரம் சுமக்க நினைத்ததாலோ
ஏனிந்த நிலை

உலகாசைக்குள் வீழ்ந்து விட்டதா என் மனம்
இறைவா உனது விருப்பற்ற ஏதுமொன்றை
நான் விருப்பமாக்கி
விருந்தாக்கி விட்டேனோ



ஏனிந்த நெஞ்சு வலியோ
இந்த கணம் கணக்கிறதே
இறைவா

வறட்சி போக்கிட அருளாய் வரும்
மழைத்துளிகளாய்
எனது பாவக்கறை நீக்கிட
அழுது தீர்த்திட வேண்டும்

இறைவா மன்னித்து விடு
யா அஸீஸ் யா ஹகீம்
உன்னையன்றி யாரால் தான் என்னையறிந்திட முடியும்

எந்தன் விம்பத்தில் நான்
எதை பொருத்தி திருத்த நினைத்தேனோ

கோலாறென்று உணர்த்திக்கொண்டிருக்கும் மனதோ
ஏதென்று உணர விடவில்லையே

யா அஸீஸ் யா ஹகீம்
என்னை படைத்தோனே
என்னைக்காப்போனே
வழிக்கொடுத்து விடு
வலி நீக்கி விடு

கவிஞர் சஹீனாஸ் பேகம், புத்தளம்(இலங்கை)

# நேசம்

உண்மையான
நேசத்தில்
ஒன்று
சொல்லைக் கடந்தது
மற்றொன்று
சொல்ல முடியாதது



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# அச்சம் அறு உச்சம் பெறு

பிறப்பது ஒருமுறை உலகில்
இறப்பதும் ஒருமுறை என்றும்
துறப்போம் அச்சம் தனையே
மறப்போம் வாழ்வில் அதனையே
சிறப்பும் உயர்வும் சிந்தையில்
அறமாய்க் கொண்டே வாழ்வோம்

வாழ்வது உலகில் சிறப்பானால்
தாழ்வது என்றும் இழிவன்றோ
வீழ்வது உலகில் கோழையானால்
எழுவது என்றும் ஏற்றமன்றோ
அழகான வாழ்வை நாளும்
ஆழமாக வாழ்ந்தே மகிழ்வோம்



மகிழ்ச்சி என்பது உலகில்
நெகிழ்ச்சி தந்திடும் நாளும்
அகிலம் போற்றும் அற்புத
சகிப்பை ஏற்றே நாமும்
தகிப்பை நீக்கி வீட்டில்
நெகிழ்வை வளர்த்தே வாழ்வோம்

அச்சமதை போக்கி நீயும்
மிச்சமதை வாழ்ந்து வந்தால்
துச்சமாய் ஆகுமே என்றும்
உச்சமான துன்பங்கள் எல்லாம்
எச்சங்களை எல்லாம் என்றும்
சொச்சமாக கொண்டே வாழ்வோம்

கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை

# உற்றுப் பார்க்குதடி உன் விழிகள்

உற்றுப் பார்க்குதடி உன் விழிகள் - என்னை
வெட்டப் பாக்குதடி அந்த இமைகள்

நீ சாயம் பூசிய உதடும் - என்னை
சாய்க்க பாக்குதடி

உன் முகத்தில் மறைந்த புன்னகையும் - என் மனதில்
பூக்க நினைக்குதடி

தூரத்தில் இருக்கும் நிலவாய் நீ
தொட்டு விட முடியாத பகலாய் நான்

ரசித்துக் கொண்டே இருக்கிறேன்
உன் முகத்தை மட்டுமே.

கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா

# முடிவில் துவக்கம்

முடிந்தவரை எழுதிவிட்டு
முகவரியை தீட்டி
முற்றும் போடுகையில்
முற்றுப் புள்ளியோடு
தொடர்வதற்கான ஆரம்பம்
புள்ளியின் புதிர்



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

# பாரதிக்கு கண்ணம்மா!

பாரதிக்கு கண்ணம்மா!
நீ எனபக்திசெய்து பிழைத்திடு
பயன் கருதாது உழைத்திடு வென
பாரதியும் தன் கவியில்
புனைந்திட்டான்

கிடந்த கோலத்து கோமளனாம்
உன்னுள் விகுதியற்ற தேடலில்
யாம் தொலைந்தோம்

கண்ணன் காதலில் பாரதிக்கு
கண்ணம்மா உயிர் பெற்றாள்

இச் சிற்றுயிர்
ஏது செய்யும்
கருத்தில் கண்ணன் குழைத்து
காகிதத்தில் பிதற்றுவதை தவிர

எதிர்பாரா பொழுதில்
நுனிமூக்கமர்ந்த
பட்டாம்பூச்சி போல
திணறும் ரசனை போன்று
நின் தாள்பணிந்த யாம்!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# மகாத்மா என்னும் மகான்

அடிமை இந்திய அன்னையின்
கைவிலங்கைஉடைக்கவே
ஆயிரமாயிரம்வீரர்கள்அணிவகுத்தநாடு

உடல்பொருள் ஆவியென
உயிர்நீத்தசெம்மல்கள்நூறாயிரம்இங்குண்டு.

ஆனாலுமிங்கொருவர்
கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம்காணவந்தாரே

கையிலே கைத்தடி ஆனாலும்
அகிம்சை வளர்த்த  அற்புதர் அவர்

அரையாடை சித்தராய் அகிலமும்வலம்வந்து
சுதந்திரதாகம் எழசெய்தாரே

அவர்பின்னேஆயிரம் தலைவர்கள் ஓரணியாய் வலம்வந்து
அன்னியரைவிரட்டிடவே கைகோர்த்த நிலையும்தான்
வெற்றியாய் அமைந்ததே

ஆனாலும் வன்முறை துளியேனும் விரும்பாமல்
அகிம்சையென்னும் ஆயிதத்தால்
*அடிமைசங்கிலி* உடைத்தாரே

பொக்கைவாய் சிரிப்பாலே புவியெங்கும் அன்போடு
*காந்திதாத்தா**வென உறவோடு உயிராய்கலந்த
உத்தமர் *காந்தி மகான்*

ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
நம்வழி அவர்காட்டிய
*அகிம்சைவழி** தவறாமல்நடைபோடுவோம்.

கவிஞர் ஜேப்பி @ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# அப்பா

எவ்வளவு
முயற்சித்தாலும்
நம்மால்
முடிவதில்லை
அத்தனையும்
செய்துவிட்டு
வரிசைப் பட்டியலில்
அம்மாவிற்கு
பின் நிற்கும்
கம்பீரமான
அப்பாவின்
உயரம் தாண்ட



இனிய தந்தையர் தின நல்வாழ்த்துகள்

கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.- திருக்குறள்

கவி

செரித்த தன்மை அறிந்து
பொரித்த உணவு நீக்கி
தக்க அளவு உண்டால்
பக்கா விளைவு உடற்கு
பக்க விளைவு இல்லை உயிர்க்கு.



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# ஆவல்

கரங்களில் கரம் கோர்த்து
காதலில் லயித்தபடி
மனங்களால் ஒன்றிணைந்து
மணலில் பாதங்கள் புதைய
கடல் அலை நுரைகளில்
கால்களை நனைத்தபடி
கண்ணாளனுடன் அன்புடன்
அளவளாவே ஆவல் தான்
காதலிக்கும்!

கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# கண்ணிமையில் அவள்

கண்கள் பார்த்து கதைகள் பேசி
காதல் மலர்ந்தது உள்ளம் ஒன்றாகி
ஒருவருக்கொருவர் வாழ்க்கையின் துணையாகி
காலங்கள் நீளட்டும் என்றும்
பசுமை மலரட்டும் ஆனந்தம் வாழ்வில்
அன்பே என்றும் நிலையானது
இயற்கையை போல!



கவிஞர் முனைவர். அக வீரவன்சாரா, சிதம்பரம்

# தொலைந்த நட்பு

காரணம் என்ன மறந்துவிட்டது
காலங்கள் பலவும் கடந்து விட்டது
கடிதங்களும் வந்ததில்லை
அலைபேசியும் ஒலித்ததில்லை
இருபது ஆண்டுகள் கடந்த பின்னும்
இருந்து விடவா போகிறது கோபங்கள்!

எதார்த்தமாய் பார்த்தபோது
வார்த்தைகள் எழவில்லை
கண்கள் அகலவில்லை
உடம்பு நகரவில்லை
அவ்வளவு எளிதாய் கடக்க
தெம்பும் நமக்கில்லை!

பழகிய பள்ளி நாட்கள்
பளிங்கு போல் வந்து போயின
பிரிந்து உண்டதில்லை
தனியே சென்றதில்லை

என் காயத்திற்கு
கண்ணீர் வருமுன் -உன்
கரங்கள் வந்துவிடும்
உன்னை தொலைவில் பார்த்தாலே
தொல்லைகள் ஓடிவிடும்

இதோ
எனக்கு அருகிலே நிற்கிறாய்
பேசாமல் போய் விடுவாயோ
பேசினால் சண்டையிடுவாயோ
மறந்து போன பிணக்குகளை ஞாபகப்படுத்துவாயோ!

வேண்டாம் மறந்தது
மறந்ததாகவே இருக்கட்டும்
பேசாமல் நாம் பிரிந்த நாட்களில்
என்னை தொலைத்ததே அதிகம்
அகத்தை இன்று தான் கண்டேன்
புறத்தே நின்று கொண்டு வா என்கிறது

எங்கேயோ பார்த்ததாய்
நீயும் உற்றுப் பார்க்கிறாய்
கண்ணில் சிரித்தபடி
கண்ணா எப்படி இருக்கிறாய்?
கண்டுணர்ந்து கேட்ட போது
கண்ணீரே வந்துவிட்டது!

என்னை இன்னும் மறக்கவில்லை
உன் கண்கள் என்னை துறக்கவில்லை
ஏன் சண்டையிட்டோம்
இருவருக்கும் நினைவில்லை
இனி எப்போதும் அது தேவையில்லை
மண் மூடி போன வைரங்கள்
இப்பொழுது பட்டைத் தீட்டிக்
கொண்டிருக்கின்றன
நாளும் அவை கதை பேசும்
நட்பாய் அவை ஒளி வீசும்

கவிஞர் சி முத்துராசன், அரியலூர்

# நீங்கள் அறிந்த சில உண்மைகள்

காலத்தின் கால்களை கட்டி வைக்க முடியது
அந்த கடிகாரம் கால்களின்றியே ஓடுகிறது

பணம் இன்று காகிதத்தில் இல்லை
அதுவங்கிக் கணக்கில் எண்ணில்தான் உள்ளது.

மனித முளையையும் இந்த பிரபஞ்சத்தையும்
அறிய முடிந்தது மிக மிக முறைந்தளவிலேயே.

இக்காலத்தில் உணவின்றி பட்டினியால் இறப்பவர்களை விட
உடல்பருமனால் இறப்பவர்களே அதிகம்.

உடல்வலிமையால் உழைக்கும் கூட்டம் ஏழையாகவும்
முளைவலிமையால் உழைக்கும் கூட்டம்
கோடீஸ்வரராகவும் இருக்கின்றனர்.

இந்த உலகில் மிகக் கடினமானது எது தெரியுமா?
இயல்பாக இருப்பது.

உலகில் மிகச்சிறந்த முதலீடு எது தெரியுமா?
அது புத்தகத்திற்கான முதலீடுதான்.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# தடம் மாறும் சிறார்கள்


எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே என்றொரு பாடலுண்டு!
அன்றாடச் செய்திகளில் வளரிளம் பருவத்தினர்
குற்றச் செயல்களில் ஈடுபடும் காரணத்தால்
கூர்நோக்கு இல்லங்களில் அடைபடுதல் காண்கின்றோம்!
இருசக்கர வாகனங்களில் அதிவேகமாய் விரைதல்
இரயிலில் பேருந்தில் அச்சுறுத்தும் செயல்கள்
கண்டிக்கும் ஆசிரியரை அடிக்கக் கையோங்கல்
இனக்கவர்ச்சி, ஈர்ப்பாலே இழைக்கின்ற குற்றங்கள்
நண்பர்கள் நல்லவராய் அமையாத காரணத்தால்
புகைப்பழக்கம், மதுஅருந்தல், போதைப்பொருள்
புழக்கமென குற்றங்களின் பட்டியல் நீள்கிறதே!
உடலளவில், மனத்தளவில், உணர்வுகளில் மாற்றங்கள்
காணுகின்ற பருவத்தை கவனமுடன் கையாளத்
தவறியதால் சட்டத்தின்முன் குற்றவாளிகளாய் சிறார்கள்!
இணையத்தில், திரைப்படத்தில் ஈர்க்கின்ற காட்சிகளால்
தானும் அவ்வாறு நடந்திட எண்ணுகின்றார்!
அவர்களின் அடிப்படை உரிமைகள் காக்கப்பட்டு
அப்பாவிக் குழந்தைகளாய்க் கருதப்படல் வேண்டும்!
கூர்நோக்கு இல்லங்களில், கல்வியொடு தொழிற்பயிற்சி
அரவணைப்புடன் மறுசீரமைக்கும் மனவளப் பயிற்சிகள்
பெற்றிட வகைசெய்தால் பெரும்பயன் விளைந்திடுமே!
கட்டுப்பாடில்லா சுதந்திரம், கண்டிக்கத் தவறுதல்,
பொறுப்பற்ற சமூகம், இளமையில் வறுமை
இவையும் சிறுவர்கள் தடம்மாறக் காரணங்கள்!
சிறுவர்களின் செயல்களைக் கண்காணிப்பது அவசியமே1
குடும்பம், சமூகம், காவல்துறை, அரசாங்கம்
இடித்துரைக்கும் நண்பர்கள், பொறுப்புடன் செயலாற்ற
சிறார்கள் சீர்திருத்தம் எதிர்பார்க்கும் பலனளிக்கும்!
பதின்ம வயதினரை நல்வழியில் வளர்த்தாலே
இதுபோன்ற குற்றங்கள் பெருகாது இந்நாட்டில்!

கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# புன்னகையின் நிறங்கள்

## நூல் அனுபவம் கவிதைத் தொகுப்பு

**ஆசிரியர்** : திரு ஐ. தர்மசிங்
**பதிப்பு** : சரோஜினி பதிப்பகம் கோவை
**விலை** : ₹ 130 **பக்கங்கள்** : 140
**வெளியீடு:** : மே 2024 **நூல் வாங்க** :+918637481050,




கவிஞர் ஐ தர்மசிங் அவர்களின் இரண்டாவது கவிதைத் தொகுப்பான "புன்னகையின் நிறங்கள் "வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது, வாழ்க்கையின் வலியை வார்த்தைகள் மூலம் தணிய வைக்கும் ஒரு வடிகால் தான் கவிதை என்றே நான் நினைக்கிறன்.

சமூகத்திடம் வேறேதும் சொல்ல முடியாத நிலையில் தான் கவிஞன் வரிகளை எழுத வேண்டிய அவசியம் ஏற்படுகிறது,

"உரைநடையின் சிக்கனம்தான் கவிதை "
மட்டுமல்ல
"மொழிநடையின் அற்புதமும்தான் கவிதை"

சங்ககாலத்தில் மட்டுமல்ல, இக்காலத்திலும் பாட்டுடைத் தலைவனைக் கொண்டு கவிதை தொகுப்பை வெளியிட முடியும் என்று " அப்பாவை "தன்னுடைய பாட்டுடைத் தலைவனாய் எடுத்து கவிதைப் பாடியிருக்கிறார் கவிஞர் அவர்கள்,

வாழ்க்கை பாடங்களால் நிறைந்திருக்கிறது போல, கவிதைகளும் அனுபவங்களால் நிறைந்திருக்கிறது,
இமயம் முதல் குமரி வரை என்ற சொல்படி குமரியில் இருந்துஎழுதும் இவருடைய கவிதை இந்தத் தொகுப்பில் முதல் கவிதையாக மலையில் இருந்தே தொடங்குகிறது.

*திரு இரா. மதிராஜ்*

கங்கைகொண்டான், கடாரம் கொண்டான், வாதாபி கொண்டான், இமயம் கொண்டான், என்ற வரிசையில் இவரும் 'கவிதைக் கொண்டானாக' அண்ணன் வருவார் என்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

" வளர்ச்சி என்று
பெயர் சூட்டடப்பட்டுள்ளது
பேரழிவை
இந்த நூற்றாண்டு " என்று கவிதைகள் வெடிக்க ஆரம்பிக்கிறது
எல்லா கவிஞர்களும் காதலைப் பற்றிய பாடிக்கொண்டிருக்கும் போது, கவிஞர் வாழ்க்கையைப் பற்றியே அதிகம் பாடியிருக்கிறார்.

இயலாமையை, ஏமாற்றத்தை, எதார்த்தத்தை, கண்ணீரை, கவலையை, அனுபவத்தை, ஆறுதலை, முயற்சியை, முடியாமையை, தன்னம்பிக்கையை, பொறுமையை, வெற்றியை என பல்வேறு விதங்களில் தனது கவிதைகளை அள்ளித் தூவியிருக்கிறார்,

"அடுத்த மாதம் பார்க்கலாம் " என்று இயலாமையின் வெளிப்பாட்டை இன்று நடுத்தர வர்க்கத்தை அவர்களது வாழ்வியலை நம் கண் முன் அழகியலாக நிறுத்தி இருக்கிறார்,

சுதந்திரத்தைப் பறிகொடுத்த கிளியைப் பற்றி எழுதும் போது
" தனது சிறகுகளை
விரித்து சோதிப்பதை
தவிர்ப்பதேயில்லை
கூண்டுக்கிளி " என்று எழுதி இருக்கிறார்,

மழலைக் கவிதைகளில்
"ஈரமாகும் நேரங்களில்
அவசரமாக இடம்பெறும் குழந்தை
அம்மாவிடம் " என்றும்

திரு இரா. மதிராஜ்

தன்னம்பிக்கை குறித்து எழுதும்போது
"முகஸ்துதியினால் அல்ல
அவமானத்தினால்
பண்பட்டவன் நான் " என்றும்,

"அடுத்த இலக்கு
நோக்கி பயணப்படும் போது
அதில் அகப்படலாம்
உனக்கான வெற்றி" என்றும் எழுதியதும் அருமை, உண்மை

"அதிகாரத்தின் பரப்பு
அதிகரிக்கும் போது
துவங்குகிறது
மீறலின் சிறகுகள்" என்று அத்தனைக் கவிதைகளும்

ஒரு வகை தன்னம்பிக்கை கவிதைகளே,
இந்த "புன்னகையை நிறங்களிலும் "
வாழ்க்கை கற்றுக் கொடுக்கும் பாடத்தின் வண்ணங்களை எண்ண முடியவில்லை, அவைகளின் எண்ணிக்கை எண்ணற்றவையாகவே இருக்கிறது. வாழ்த்துக்கள் அண்ணன்,

இனி கவிதை தாயின் பாட்டுவண்டியில் வண்டியில் வேகமாய் ஓடும் சக்கரங்களாக இருக்கட்டும் உங்களது கவிதைகள், வாழ்த்துக்கள் அண்ணன்.

உங்கள் கவிதை தோப்புகள் தொடர்ந்து வெளிவரட்டும்!
உங்களது எழுத்தின் பயணம் தொடரட்டும்!
உங்கள் இலக்கிய தவம் வெற்றி பெறட்டும்! என வாழ்த்துகிறேன், வேண்டுகிறேன்.

திரு இரா. மதிராஜ்

## நூல் அனுபவம்

## தன்முனைக் கவிவனம்

இயற்கையைத் தொட்டு, சமுதாய அவலங்கள், காதல், சேமிப்பு, தாய்மை என்று முதலும் முடிவும் ஆகிய பெண்மையில் தனது தன்முனைப்பை நிறைவு செய்தது அழகோ! அழகு!! இனி கவிஞரிகளின் கவிக்களம் கூறும் கருத்துக்களத்தை என்னால் முடிந்த அலங்கார அணிந்துரையில் அலங்கரிக்க முயல்கிறேன்.

இரவு பெண் அலங்காரத்தில் நிலாப் பொட்டு, இயற்கையை விவரிப்பதே அகமகிழ்ச்சி. மனிதேய இலக்கணம் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பல் தன்னினம் மட்டுமல்ல, தரணியில் அனைத்துயிர்க்கும் என்று பாரதியைப் போல் *காக்கைக் குருவி எங்கள் சாதி* குருவிக்கு உணவு அளிக்கும் *நேயம்* . இன்பத்திலே பெரிய இன்பம் இருப்பதில் கொடுப்பது; பேரின்பம் இருப்பதையேக் கொடுப்பது கருணையின் இலக்கணமாய் வாழ்ந்த அன்னை தெராசாவை கண்முன் காட்டி கலங்கவைக்கும் நெகிச்சியாக உள்ளது. வெற்றிக்கான வழிமுறையாக முயற்சியும் திட்டமும் என்று எடுத்துரைக்கும் போது நமக்குள் பல ஆலோசனைக் கூட்டத்தின் சாராம்சம் என்றே கருதலாம்.




சேமிப்பு என்னும் எதிர்கால வைப்பு நிதி பாதிப்பு இல்லாம் வாழலாம். *இயலாத நாட்களில் இன்பமாய் வாழலாம்* என்கிறார். இலக்கைக் குறிவைத்து இன்னொரு உலகைத் தொடவைக்க துணிவு தான் மாபெரும் ஆயுதம்.

கொடுமையிலும் கொடுமை தனிமை. அதனைக் கூட *தனிப்பெரும் கொடுமை* என கவிஞர் சுட்டிக்காட்டுகிறார். உலகினில் பெரிது பெரிது தாய்மை என்று *ஔவையை* ப் போல் அரிது, பெரிது என பட்டியலிடுகிறார் கவிஞர்.

திருமதி மோ. கோமளாநேத்ராஜி

அறிவு என்னும் சுகமான சுமையைத் தாங்கிட புத்தகச் சுமையும், பசி என்னும் காலிக் குடத்தை நிரப்ப குப்பை பாரமென இரண்டு வேறுபட்ட நிலைக்கு புதுவிளக்கம் தந்துள்ளது *இரு சுமை தாங்கிகள்*. கொஞ்சிப் பேசியே குழிக்குள் விழ வைப்பார் யார்? நயவஞ்சகர். இறந்தும் வாழ்கின்ற நிலைத்த புகழினர் *இறப்பின் சிறப்பு*. ஆண்டுக்காண்டு இடர்கள் பெருகினும் வாழ்த்தும் மரபு வீழவதில்லை, புத்தாண்டுக்கும் சேர்த்தே. தவம் என்பது யாருமற்ற வனத்தில், உணவு, நீர் தவிர்த்து இருப்பதில்லை. உண்டவர் வயிறு நிறையும் ஏப்ப சத்தமும், பரிமாறும் போது கரண்டிக்கும் குண்டானுக்குமான காதல் மொழியில் கூட தவம் செய்யலாம் அன்னதானம் வழங்கியே.



தை என்றால் கரும்பும் மஞ்சளும் பொங்கலும் என வரிசை கட்டி நினைவுக்குள் நின்று விடுவது இயல்பு. இதன் அடிப்படை நோக்கம் நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டின் விளக்கம் எனக் கருதலாம். விடியலுக்கு வரவேற்புத் தோரணம் கோலம். ஒற்றுமை இருப்பின் பிரிவினை என்னும் கொடுப்பாவிக்கு இடம் ஏது?

அள்ள அள்ள குறையாத அன்பு. வேற்றுமொழியைக் கற்பது வியாபாரம்; விழிகளின் வழியே வந்த காதல்; ஆரோக்கியத்தின் ஆதாரம் இயற்கை, பெண் என்னும் மலரை நாள்தோறும் பிய்த்தெடுத்து ஆண்டுக்கொருமுறை மகளிர் தினக் கொண்டாட்டம, மனித இனத்தின் மாபெரும் மகத்துவம் பெண் எனச் சுட்டும் போது, அதில் எவ்வளவு பெரிய உண்மை சாதாரணமாக கூறிவிட்டார் என்று சற்றே வியந்துதான் போனேன்.

கவிஞரின் கருத்துலகம் *சொல்லி அடிப்பதில் கில்லி* என்று நெத்தியடி பதிலடி வழங்குகிறார் தனது தன்முனைப்புக் கவிதையின் வாயிலாக. அவரின் இலக்கியப் பணி இமயம் வரை எட்டட்டும் என வாழ்த்த வயதின்றி இறைவனை வேண்டி மகிழ்கிறேன்.

திருமதி மோ. கோமளாநேதாஜி

# மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை

கட்டுரை

## 31.08.1896 - 04.02.1985

### செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா



**பிறப்பு :** சென்னை, சைதாப் பேட்டை மேட்டுப்பாளையத்தில் 31.08.1896

**படிப்பு :** தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெற்றவர்

**பதிப்பித்த நூல்கள்:** இறையனார் அகப்பொருள்,தொல்.சொல் (நச்சர் உரை), தஞ்சைவாணன் கோவை,வீரசோழியம், நளவெண்பா அஷ்டபிரபந்தம், யாப்பருங்கலம் காரிகை, யசோதர காவியம் முதலிய நூல்களை பதிப்பித்தார்.

**யாப்பருங்கலக்காரிகை :**

இலக்கண உலகில் இவர் பதிப்பித்த யாப்பருங்கலக்காரிகை இன்றும் அறிஞர்களால் போற்றப்படுகிறது. இதற்கு இணையான ஒரு பதிப்பு இன்றுவரை இல்லை என்றே கூறலாம். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இந்நூலை மீள்பதிப்பு செய்துள்ளது. இவர் பதிப்பாளராக மட்டுமன்றி படைப்பாளராகவும் இருந்துள்ளார்.

**பிற படைப்புகள் :**

பத்திராயு(அ) ஆட்சிக்குரியோர்,திருக்கண்ணபிரானார் அற்புதவிளக்கு ,குணசாகரர் (அ) இன்சொல் இயல்பு, அரிச்சந்திர புராணச் சுருக்கம், அராபிக்கதைகள் முதலியன இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை. இவை தவிர, அம்பலவாணன்,இளங்கோவன் என்னும் இரு புதினங்களையும் படைத்துள்ளார்.


திரு அ வில்சன் இதழாசிரியர்

கட்டுரை

## 31.08.1896 - 04.02.1985

## செந்தமிழ்க் களஞ்சியம், இலக்கணத் தாத்தா

### சிந்தாமணிச்செல்வர்:




மொழி செப்பமாக இல்லாவிட்டால் கருதிய எச்செயலும் கருதியபடி நடவாது என்பதை உணர்ந்த மே.வீ.வே. மொழியில் பிழை நேராதபடி எ ச் ச ரி க் கை யு ட ன் செயல்பட்டுள்ளார்.காஞ்சிபுரத்தில் "கச்சித் தமிழ்க் கழகம்" என்னும் ஓர் அமைப்பை நிறுவி பலருக்கும் தமிழ் உணர்வை ஊட்டினார்.அத்துடன் சீவகசிந்தாமணி குறித்து நெடியதோர் சொற்பொழிவாற்றினார். அதனால்தான் திரு.வி.க. "சிந்தாமணிச்செல்வர்" என்னும் பட்டமளித்து இவரைப் பாராட்டினார்.

### விருதுகள் :

செந்தமிழ்க்களஞ்சியம் , கன்னித் தமிழ்க்களஞ்சியம், கலைமாமணி ஆகிய விருதுகளையும் இவர் பெற்றுள்ளார். நியூயார்க் உலகப் பல்கலைக்கழகம் மே.வீ.வே.க்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

கவியரசு கண்ணதாசன் உள்ளிட்ட பலரும் எழுதிய "பாவலர் போற்றும் மகாவித்துவான் மே.வீ.வே." என்னும் தொகுப்பு நூல் இவரது புகழை இன்றளவும் பேசிக்கொண்டிருக்கிறது.

### மறைவு :

தமிழ் இலக்கிய உலகில் 89 ஆண்டுகள் வரை உலவிய மே.வீ.வே. 4.2.1985 இறைவனடி சேர்ந்தார்.

திரு அ வில்சன் இதழாசிரியர்

நாளை

# நமதே

வெற்றி என்பது
உன்னை உலகிற்கு
அறிமுகம் செய்வது.
தோல்வி என்பது
உன்னை உனக்கே
அறிமுகம் செய்வது.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :
9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com